

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஹார்வார்ட் மருத்துவப் பள்ளி, புளூம்பெர்க் பொது மருத்துவப்பள்ளி போன்ற பல்வேறு மருத்துவப் பள்ளிகளில் தமிழ்நாடு அரசின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பற்றி விளக்கவுரை அளிக்க அமெரிக்க நாட்டிற்கு செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் கே. நாராயணசாமி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2024) தலைமைச் செயலகத்தில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாக தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மதுரை, தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் நிர்வாக அலுவலராக சிறப்பாக பணியாற்றி 30.6.2024 அன்று ஓய்வு பெற்ற மருத்துவர் காந்திமதிநாதன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றதோடு, உலக மருத்துவர்கள் நாளையொட்டி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இன்றையதினம் நடைபெறவுள்ள விழாவில் தனக்கு சிறந்த மருத்துவருக்கான விருது வழங்கப்படவுள்ளதையொட்டியும் வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் ஹஜ் பயணம் சென்று திரும்பிய தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## 3 குற்றவியல் சட்டங்கள் அமல்!

# புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்க வேண்டும்!

### டெல்லி பார் கவுன்சில், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 3 - கடும் எதிர்ப்பையும் மீறி ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த 3 புதிய குற்றவியல் சட்டங்களும் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்த சட்டங்களை ஒத்திவைக்குமாறு டெல்லி பார் கவுன்சில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம் எழுதி உள்ளது. ஒன்றிய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களில் ஏராளமான பிற்போக்கு விதிகள் உள்ளதாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய சட்டங்களுக்குப் பதிலாக பாரதிய நியாய சன்ஹிதா பிஎன்எஸ், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாட்சிய அதினியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் ஒன்றிய அரசால் கொண்டுவரப் பட்டுள்ளன. கடந்த ஆண்டு நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின்போது எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த புதிய சட்டங்களுக்கான மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டன. பின்னர் இந்த சட்டங்களுக்கு, குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்த பிறகு அரசிதழில் வெளியானது. 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளன. இந்நிலையில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்குமாறு, உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு டெல்லி பார்கவுன்சில் சார்பில் வழக்கறிஞர்கள் கடிதம் எழுதி உள்ளனர்.

## விக்கிரவாண்டி ஒன்றியத்தில் வேட்பாளர்

# அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாக்குச் சேகரிப்பு!

### அமைச்சர்கள் - பொன். கௌதம சிகாமணி பங்கேற்பு!

அரியலூர், ஜூலை 3 - விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான I.N.D.I.A கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், தும்பூர் தாங்கல், தும்பூர்,அசோகபுரி பூங்குனம், உலகலாம் பூண்டி, கொட்டியாம் பூண்டி ஆகிய கிராமத்து வாக்காளப் பெருமக்களிடம், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பொன்முடி, கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன்,

நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கௌதம சிகாமணி, கழக சட்டத் திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா சந்திரசேகர் ஆகியோருடன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

இதில் பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெகதீசன், மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், நல்லதம்பி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூரயி கதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர்

# எம்.வெங்கையா நாயுடு பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை 3 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

**இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.**

**உங்களுக்கு மகிழ்ச்சியும், ஆரோக்கியமான வாழ்க்கையும் அமைந்திட வாழ்த்துக்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவர்கள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 3- மருத்துவர்கள் நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தொண்டுள்ளமும் அர்ப்பணிப்புணர்வும் கொண்டு சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெறும் மருத்துவர்கள் அனைவருக்கும் "மருத்துவர்கள் நாள்" வாழ்த்துகள்!**

**மதுரை தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையைத் தனது நிர்வாகத் திறனால் மேம்படுத்தி ஓய்வு பெற்றுள்ள மருத்துவர் காந்திமதிநாதன் அவர்களை நேரில் பாராட்டி மகிழ்ந்தேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் எம்.எல்.ஏ. வி.டி.கலைச்செல்வன் தலைமையில்!

# விருத்தாசலத்தில் "அழகப்பா நினைவு" கைப்பந்து போட்டி!

### மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜூலை 3 – கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் தென்னிந்திய அளவிலான சேலஞ்சர்ஸ் கைப்பந்து கழகம் நடத்தும் 6ஆம் ஆண்டு "அழகப்பா நினைவு"சுழற்கோப்பை கைப்பந்து போட்டி 3 நாட்கள் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் ஐ.ஓ.பி., எஸ்.ஆர்.எம்., ஜி.எஸ்.டி., வருமான வரித்துறை ஆகிய 4 அணிகளும், பெண்கள் பிரிவில் எஸ்.ஆர்.எம்., ஜே.பி.ஆர்., பி.கே.எஸ்., எஸ்.டி. எ.டி. ஆகிய நான்கு அணிகளும் பங்கேற்றன.

இந்த துவக்க விழாவை முன்னிட்டு விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற பேரணி விருதாச்சலம் பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கியது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி.கலைச்செல்வன் தலைமை தாங்கினார். தலைவர் சலீம் செயலாளர் மோகன், பொருளாளர் அருண், சோழன் சம்சுதீன், மேனக் ஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சியர் டாக்டர் அருண் தம்புராஜ் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

அப்போது விருத்தாசலம் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ், தாசில்தார் உதயகுமார், இன்ஸ்பெக்டர் முருகேசன், சப் இன்ஸ்பெக்டர் அய்யனார், என்.எல்.சி., கைப்பந்து வீரர் ராஜன் பாபு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர். இந்த பேரணி விருத்தாசலம் பஸ் நிலையத்தில் இருந்து தொடங்கி ஜங்ஷன் சாலை பாலக்கரை வரை நடந்தது.

அதனைத் தொடர்ந்து பெரியார் நகர் நகராட்சி மின்னொளி விளையாட்டு மைதானத்தில் நடந்த போட்டியில் விருத்தாசலம் கோட்டாட்சியர் சையத் மெஹ்மூத் ஐ.ஓ.பி., எஸ்.ஆர்.எம். ஆண்கள் அணி மோதிய முதல் போட்டியை தொடங்கி வைத்தார்.



பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் நேற்று விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறுவதை ஒட்டி, காணை வடக்கு ஒன்றியம்,கடையம் ஊராட்சிக்குட்பட்ட பாக எண் 6,7,8,9 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாக முகவர்கள், பாகப் பொறுப்பாளர்கள் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களை நேரில் சந்தித்து தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, பொதுமக்களிடம் அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி உதயசூரியன் சின்னத்தில் வாக்குச் சேகரித்தார்கள். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற, உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட ஆரியூர் ஊராட்சியில் பாகம் எண் 130, 131 க்கு உட்பட்ட பகுதியில் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.டி.மணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.சி.அறிவழகன், ஓ.எம்.ரமேஷ், கே.சி.ரவிச்சந்திரன், ராஜ அய்யப்பன், பேரூர்ச் செயலாளர் கே.ஆர்.பிரபாகரன், ஒன்றியக் கவுன்சிலர்கள் சிவஞானவேல், செல்வி ராஜா, துரைசாமி ஆகியோர் உள்ளனர்.